DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 22-2025

Deposition of Witness for D.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ஆனந்த குமார் | **தாலுகா** | : | |
| **த.பெ.** | : | கருப்பசாமி | **தொழில்** | : | KVB, |
| **ஊர்** | : | Srivilliputtur | **வயது** | : | 38 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் கரூர் வைசியா வங்கி, திருவில்லிபுத்தூர் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்தது. எங்கள் வங்கியில் ராஜா என்பவர் நடப்பு கணக்கு எண்.1804010000000121 வைத்துள்ளார். அவருடைய 20.08.2024 முதல் 04.09.2024 வரைக்கான வங்கி கணக்கு பட்டியலை சமர்ப்பிக்கிறேன். அது **<u>எா.சா.ஆ.1</u>** ஆகும். அந்த வங்கிக் கணக்கானது 21.06.2024 அன்று துவங்கப்பட்டது. 000124, 000125 மற்றும் 000126 ஆகிய எண்கள் கொண்ட காசோலைகள் எந்த தேதியில் வசூலுக்கு வந்தது என்றால் 000125 மற்றும் 000126 ஆகிய இரண்டு காசோலைகள் இது நாள் வரை அந்த வங்கி கணக்கில் வசூலுக்கு வரவில்லை. காசோலை எண்.000124 இரண்டு முறை வங்கியில் வசூலுக்கு வந்துள்ளது. முதன் முறை 21.08.2024 அன்றும் இரண்டாவது முறை 03.09.2024 அன்றும் வசூலுக்கு வந்துள்ளது. காசோலை எண்.000124 பிரமிளா நாகராஜன் என்பவரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன வங்கி கணக்கு இது நாள் வரை செயல்பாட்டில் உள்ளது. மேற்படி கணக்கின் வாடிக்கையாளருக்கு எங்கள் வங்கியில் நடப்பு கணக்கு ஏதும் உண்டா என்றால் அந்த விபரம் குறித்து நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடாததால் அது பற்றி சாட்சி சொல்ல இயலாது.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

எதிரி ராஜா எங்கள் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளார் என்றால் சரி. அந்த வங்கி கணக்கு 21.06.2024 அன்று துவங்கப்பட்டுள்ளது. அந்த வங்கி கணக்கு துவங்கும்போது பொதுவாக குறைந்தபட்ச இருப்பு ரூ.10,000/- செலுத்தி வங்கி கணக்கு துவங்கியிருப்பார்கள். அந்த வங்கி கணக்கில் வரவு செலவு வங்கி கணக்கு துவங்கப்பட்ட தேதி முதல் வாடிக்கையாளர் எப்போது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். மேற்படி வங்கி கணக்கில் எதிரி காசோலை வசதி பெற்றுள்ளார் என்றால் சரி. காசோலை புத்தகம் பெற்றுள்ளார் என்றால் சரி. எத்தனை காசோலைகள் அடங்கிய காசோலை புத்தகம் பெற்றிருந்தார் என்றால் நீதிமன்ற அழைப்பாணையில்

K. Ananth

குறிப்பிடாததால் அந்த விபரம் நான் எடுத்துவரவில்லை. எதிரி பெற்ற காசோலை புத்தகத்தில் எத்தனை காசோலைகள் எங்கள் வங்கிக்கு வசூலுக்கு வந்தது என்றால் நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடாததால் அந்த விபரம் நான் எடுத்துவரவில்லை. மேற்சொன்ன வங்கி கணக்கு தற்போது இயக்கத்தில் உள்ளது. எதிரி அவர் வங்கி கணக்கில் காசோலையை யார் யாருக்கு கொடுத்துள்ளார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆம். எதிரி புகார்தாரரிடம் பணம் வாங்கியதும் காசோலை கொடுத்ததும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி.

காசோலை எண். 000125 எங்கள் வங்கி கணக்கின் உடைய காசோலை என்றால் சரி. காசோலை எண்.000125 என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் அந்த காசோலை வங்கிக்கு வசூலுக்கு வரவில்லை. பு.சா.ஆ.1 காசோலை வழங்கப்பட்ட வங்கி கணக்கு குறித்து ஆவணங்கள் எடுத்துவர நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்படவில்லை. ஒரு வாடிக்கையாளர் வங்கி கணக்கை முடிக்கும்போது அவர் கைவசம் உள்ள காசோலைகளை ஒப்படைக்கவேண்டும் என்றால் அவர் கைவசம் காசோலைகள் இருந்தால் ஒப்படைக்கவேண்டும், இல்லையென்றால் அதற்கான காரணத்தை கடிதத்தில் தெரிவிக்கலாம்.

K. Amary
emp. ID: 012463
KVB, Srivillipután.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

24/2/24

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.